**உதவி அமர்வு (சார்பு) நீதிமன்றம், ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்**

**முன்னிலை: திரு.C.ஜெயப்பிரகாஷ், M.Com., M.L.,**

**உதவி அமர்வு (சார்பு) நீதிபதி, ஒட்டன்சத்திரம்.**

**2026–ஆம் வருடம் ஜுலை மாதம் 23ஆம் நாள் வியாழக்கிழமை**

**திருவள்ளுவராண்டு 205 பராபவ வருடம் ஆடி மாதம் 07ஆம் நாள்**

**அமர்வு வழக்கு எண்.203/2024**

**(CNR.No.TNDG190004402024)**

**(குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஒட்டன்சத்திரம் )**

**( குற்றம்சாட்டப்பட்டவர்களைப் பொறுத்து**

**முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண்.02/2023)**

<table>
<tr><td>1</td><td>குற்றமுறையீட்டாளர் பெயர் மற்றும் குற்ற எண்</td><td colspan="3">அரசுக்காக, காவல் ஆய்வாளர்,<br>அம்பிளிக்கை காவல் நிலையம்.<br>திண்டுக்கல் மாவட்டம்.<br>குற்ற எண்.73/2022</td></tr>
<tr><td>2</td><td>குற்றம் சாட்டப்பட்டவர்கள்</td><td colspan="3">1. ரவிக்குமார் வயது 35/2024<br>த.பெ.ஆறுமுகம்<br>ஏ.டி. காலனி, நாகனம்பட்டி,<br>வெரியப்பூர் அஞ்சல்,<br>திண்டுக்கல் மாவட்டம்.<br>2. மணிகண்டன் வயது .<br>த.பெ. ஆறுமுகம்<br>ஏ.டி. காலனி, நாகனம்பட்டி,<br>வெரியப்பூர் அஞ்சல்,<br>திண்டுக்கல் மாவட்டம்.</td></tr>
<tr><td rowspan="3">3</td><td rowspan="3">குற்றம் சாட்டப்பட்டவர்களின் நீதிமன்ற காவல் விவரம்</td><td>பெயர்</td><td>நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்ட நாள்</td><td>பிணையில் விடுவிக்கப் பட்ட நாள்</td></tr>
<tr><td>1.ரவிக்குமார்</td><td>05.06.2022</td><td>28.06.2022</td></tr>
<tr><td>2.மணிகண்டன்</td><td>05.06.2022</td><td>28.06.2022</td></tr>
<tr><td>4</td><td>இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள்</td><td colspan="3">23.06.2022</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 5 | முதன்மை பதிவேட்டு வழக்காக கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | P.R.C.No.02/2023<br>நாள்: 03.01,2023 |
| 6 | அமர்வு நீதிமன்றத்திற்கு நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஒட்டன்சத்திரத்தில் இருந்து வழக்கு அனுப்பி வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நாள் | நாள் : 09.12.2024 |
| | அமர்வு நீதிமன்றத்திற்கு நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஒட்டன்சத்திரத்தில் இருந்து வழக்கு அனுப்பி வைக்கப்பட்ட நாள் | நாள் : 17.12.2024 |
| 8 | அமர்வு நீதிமன்றத்திற்கு வழக்கு கோப்பு கிடைத்த நாள் | நாள் : 19.12.2024 |
| 9 | இந்நீதிமன்றத்தால் அமர்வு நீதிமன்றத்திலிருந்து வழக்கு விசாரணைக்கு பெறப்பட்டநாள் | SC.No.203/2024 என்ற வழக்கானது மாண்புமிகு மாவட்ட நீதிமன்றத்திலிருந்து, மாவட்ட அமர்வு நீதிபதியின் உத்தரவின் பேரில் ROC No.203/2024/S.C/Dated : 09.01.2025 என்ற எண்ணில் விசாரணைக்காக வழக்கு கோப்பானது இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு, கடந்த 24.01.2025 ஆம் தேதி பெறப்பட்டுள்ளது. |
| 10 | 1 மற்றும் 2 குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் | 1வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(பி), 307ன் கீழும், 2வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 342, 307 உ/இ 34ன் கீழும் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது. |
| 11 | கு.வி.மு.ச. பிரிவு 228 – ன் கீழாக வனையப்பட்ட குற்றச்சாட்டு குறித்து குற்றம் சாட்டப்பட்டவர்களிடம் கேட்கப்பட்ட நாள் | 03.02.2025 |
| 12 | குற்றம் சாட்டப்பட்டவர்களின் கோரிக்கை | A1– பொய்வழக்கு, குற்றவாளி இல்லை.<br>A2– பொய்வழக்கு, குற்றவாளி இல்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| 13 | இவ்வழக்கில் விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளின் நாள், விபரம். | அரசு தரப்பு / எதிரிகள் தரப்பு சாட்சிகள் விவரம் | முதல் விசாரணை நாள் | குறுக்கு விசாரணை நாள் |
| | | அ.சா.1 பெருமாள் | 03.03.2025 | 02.03.2026 |
| | | அ.சா.2 முத்துலெட்சுமி | 03.03.2025 | இல்லை |
| | | அ.சா.3 கண்ணம்மாள் | 03.03.2026 | 02.03.2026 |
| | | அ.சா.4 நவீன் | 03.03.2025 | 02.03.2026 |
| | | அ.சா.5 நிர்மல் | 03.03.2025 | 02.03.2026 |
| | | அ.சா.6 செல்வக்குமார் | 03.03.2025 | 02.03.2026 |
| | | அ.சா.7 பால்ராஜ் | 03.03.2026 | 02.03.2026 |
| | | அ.சா.8 பழனிச்சாமி | 03.03.2026 | 02.03.2026 |
| | | அ.சா.9 ராஜ்குமார் | 17.03.2025 | 17.03.2025 |
| | | அ.சா.10 முத்துகிருஷ்ணன் | 07.04.2025 | 07.04.2025 |
| | | அ.சா.11 சுப்பிரமணி | 07.04.2025 | 07.04.2025<br>02.03.2026 |
| | | அ.சா.12 சவடமுத்து | 07.07.2025 | 06.07.2026 |
| | | அ.சா.13 வெங்கடாசலபதி | 28.07.2025 | 06.07.2026 |
| 14 | குவிமுச பிரிவு313(1) (ஆ)–ன் கீழாக குற்றம் சாட்டப்பட்டவர்களிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 01.08.2025 | | |
| 16 | தலைமறைவு எதிரிகள் குறித்த விபரம் | இல்லை | | |
| 17 | நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை குறித்த விபரம் | இல்லை | | |

| 18 | தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் விபரம் | CMP.No. | Under Section / Filing date | Disposal Dated | Result |
|---|---|---|---|---|---|
| | 1, 2 குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் | 2156/2022 | 437 of Cr.P.C Bail Petition | 06.06.2022 | Dismissed |
| | | 1605/2022 | 439 Cr.P.C. Bail Petition | 27.06.2022 | Allowed |
| | | 1617/2023 | Advanced Hearing Petition | 31.03.2023 | Allowed |
| | | 1618/2023 | 70(2) of Cr.P.C. Warrant Recall | 31.3.2023 | Allowed |
| | | 6584/2023 | Advanced Hearing Petition (A1) | 02.11.2023 | Allowed |
| | | 6585/2023 | 70(2) of Cr.P.C. Warrant Recall (A1) | 02.11.2023 | Allowed |
| | | 6586/2023 | Surrender Petition (A1) | 02.11.2023 | Allowed |
| | | 2386/2024 | Surrender Petition (A2) | 19.07.2024 | Allowed |
| | | 2387/2024 | 70(2) of Cr.P.C. Warrant Recall (A2) | 19.07.2024 | Allowed |
| | | 2388/2024 | Advanced Hearing Petition (A2) | 19.07.2024 | Allowed |
| | | 2399/2024 | Advanced Hearing Petition (A1) | 22.07.2024 | Allowed |
| | | 2400/2024 | 70(2) of Cr.P.C. Warrant Recall (A1) | 22.07.2024 | Allowed |
| | | 2401/2024 | Surrender Petition (A1) | 22.07.2024 | Allowed |

| | | |
|---|---|---|
| 20 | நீதிமன்ற முடிவு | குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபிக்கவில்லை. |
| 21 | தீர்ப்புரை | இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது அரசு தரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமின்றி நிரூபிக்காத காரணத்தினால், 1வது குற்றம் சாட்டப்பட்டவர் இ.த.ச. பிரிவுகள் 294(b), 307 ஆகிய பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டிற்கும், 2வது குற்றம் சாட்டப்பட்டவர் இ.த.ச. பிரிவுகள் 342, 307 உ/இ 34 பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டிற்குமான குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்தும், 1 மற்றும் 2 குற்றம் சாட்டப்பட்டவர்களை கு.வி.மு.ச. பிரிவு 235(1) நிகரான பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச் சட்டம், 2023 பிரிவு 258(1)ன் கீழாக விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| 22 | வழக்கு சொத்து குறித்த உத்தரவு | இவ்வழக்கில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள சான்று பொருள் ஒட்டன்சத்திரம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஆர்.பி.ஆர்.81/2022 என்ற எண்ணில் கடந்த 07.06.2022ஆம் தேதி பெறப்பட்டுள்ளது. இந்நீதிமன்றத்தில் ஆர்.பி.ஆர்.எண்.01/2025 என்ற எண்ணில் 14.02.2025ம் தேதி பெறப்பட்டுள்ள சா.பொ.1 கத்தியை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அரசு தரப்பிற்கு அறிவிப்பு கொடுத்து, பதில் பெறப்பட்ட பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது. |

இந்த அமர்வு வழக்கானது கடந்த 22.07.2026ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, அரசுத்தரப்பில் கூடுதல் அரசு குற்றத்துறை வழக்குரைஞர் அவர்கள் முன்னிலையாகியும், குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் வழக்குரைஞர் திரு.R.முருகானந்தம் அவர்கள் முன்னிலையாகியும், வழக்கு கோப்பு, சான்றாவணங்கள், சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டும், அரசு குற்றத்துறை வழக்குரைஞர் மற்றும் குற்றம்

சாட்டப்பட்டவர்கள் தரப்பு வழக்குரைஞர் ஆகியோர்களின் வாதுரைகள் கேட்கப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

## <u>தீர்ப்புரை</u>

**1. அம்பிளிக்கை காவல் ஆய்வாளர் தாக்கல் செய்த இறுதியறிக்கையின் சுருக்கம் :**

கடந்த 04.06.2022ம் தேதி இரவு 07.45 மணியளவில் புகார்தாரர் பெருமாள் என்பவர் அவரது வீட்டிற்கு செல்வதற்கு தனது வீட்டின் அருகில் குடியிருக்கும் முத்துலெட்சுமி என்பவரின் வீட்டிற்கு பின்புறமுள்ள சந்தில் நடந்து சென்று கொண்டிருந்தபோது புகார்தாரருக்கும், இவ்வழக்கின் 1வது எதிரி ரவிக்குமார் என்பவருக்கும் புகார்தாரரின் மகன்களுக்கு 1வது எதிரி குடிக்க பழக்கிவிட்டது சம்பந்தமாக வாய்தகராறு ஏற்பட்டு, விலகி சென்ற புகார்தாரரின் பின்னால் வந்த 1வது எதிரி, புகார்தாரரை ஏண்டா தேவிடியா மகனே நீ என்ன யோக்கியமா என்று அசிங்கமாக பேசியதற்கு ஏன் அசிங்கமாக பேசுற என்று சத்தம் போட்டதால், சத்தம் கேட்டு வந்த 1வது எதிரியின் உடன்பிறந்த தம்பியான 2வது எதிரி மணிகண்டன் என்பவர் வந்து புகார்தாரரை பின்னால் பிடித்துக்கொள்ள 1வது எதிரி ரவிக்குமார், இவனை இப்படியே விட்டால் நல்லா இருக்காது இத்தோடு செத்துப்போடா என்று சொல்லிக்கொண்டே 2வது எதிரி இடுப்பில் மறைந்து வைத்திருந்த சிறு கத்தியை எடுத்து புகார்தாரரின் இடது பக்க அடிவயிற்றில் குத்தி கொடுங்காயத்தை ஏற்படுத்தி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக 1வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(பி), 307ன் கீழும், 2வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 342, 307 உ/இ 34 ன் கீழும் அம்பிளிக்கை காவல் நிலைய காவல் ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.** அம்பிளிக்கை காவல் நிலைய முதல் தகவல் அறிக்கை எண்.73/2022 நாள் : 05.06.2022 இ.த.ச.பிரிவுகள் 294(b), 342, 307, 34 ஆகிய பிரிவுகளில் பதிவு செய்யப்பட்டு, அம்பிளிக்கை காவல் நிலைய ஆய்வாளர் புலன்விசாரணை முடித்து, கடந்த 29.12.2022ம் தேதி தாக்கல் செய்துள்ள இறுதி அறிக்கையை, முதல்நிலை

பதிவேட்டு வழக்கு எண்.02/2022 என்ற எண்ணில் கடந்த 03.01.2023ம் தேதி குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, விசாரணைக்காக வேண்டி, மாண்புமிகு திண்டுக்கல், முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டதில், அமர்வு நீதிமன்ற வழக்கு எண்.203/2024 என்ற எண்ணில் 19.12.2024ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, மாண்புமிகு மாவட்ட நீதிமன்றத்திலிருந்து மாவட்ட அமர்வு நீதிபதியின் உத்தரவின்பேரில் S.C.No.203/2024 நாள் : 09.01.2025 என்ற எண்ணில் வழக்கானது இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு, கடந்த 24.01.2025ஆம் தேதி இந்த உதவி அமர்வு நீதிமன்றத்திற்கு வழக்கானது விசாரணைக்காக பெறப்பட்டுள்ளது.

3. ஒட்டன்சத்திரம், குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் PRC.No.02/2023 என்ற வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளதை உறுதி செய்யப்பட்டு, பின்னர் அரசு தரப்பு வழக்குரைஞர் மற்றும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பு வழக்குரைஞர்கள் வழியாக இவ்வழக்கு பற்றிய விபரமும், குற்றம் சாட்டப்பட்டவர்கள்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளும், வாதுரைகளும் கேட்கப்பட்டது. இவ்வழக்கில் இந்த குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றச்செயலை புரிந்துள்ளார்கள் என்று அனுமானிப்பதற்கு ஆதாரம் இருந்துள்ளதால், கு.வி.மு.ச. பிரிவு 228(1) (b)–ன் கீழாக, இந்நீதிமன்றம் கடந்த 03.02.2025ஆம் தேதி 1வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(பி), 307ன் கீழும், 2வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 342, 307 உ/இ 34 ன் கீழும் குற்றச்சாட்டுகள் வனைந்து, படித்து காட்டப்பட்டு விளக்கியபோது, 1 மற்றும் 2 குற்றம் சாட்டப்பட்டவர்கள் பொய்வழக்கு போடப்பட்டுள்ளது என்று கூறி குற்றத்தை மறுத்துள்ளார்கள். எனவே, அரசு தரப்பு சாட்சிகளை விசாரிக்க வகை செய்யப்பட்டது.

**4. அரசு தரப்பு சாட்சிகள் வாயிலாக தெளிவாகும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :**

அ.சா.1 பெருமாள் என்பவர் கடந்த 04.06.2022ம் தேதி தனது மகன்களை 1ம் எதிரி மதுபோதைக்கு அடிமையாக்கிவிட்டதால், இரவு 7.30 மணிக்கு முத்துலெட்சுமி

வீட்டிற்கு முன்பு சென்று ஏன் என்று கேட்டுவிட்டு வீட்டிற்கு சென்றுவிட்டதாகவும், 1வது எதிரி தன்னை அசிங்கமாக பேசியதாகவும், ரவிக்குமார் அவரது தம்பியை அழைத்து வந்து தன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி அவர் கையில் வைத்திருந்த கத்தியால் தனது இடது பக்க வயிற்று பகுதியில் குத்தியதால் தனக்கு மயக்கம் வந்துவிட்டதாகவும், தன்னை ஒட்டன்சத்திரம் சி.எப். மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் கத்தியை வைத்து தான் 1வது எதிரி தனது வயிற்றில் குத்தினார் என்றும், சிகிச்சையில் இருந்த போது அம்பிளிக்கை போலீசார் தன்னை விசாரித்து புகார்வாக்குமூலம் பெற்றதாகவும், அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். <u>அ.சா.2 முத்துலெட்சுமி</u> என்பவரின் சாட்சியத்தில், அ.சா.1யையும், எதிரிகளையும் தெரியும் என்றும், சுமார் 2 வருடத்திற்கு முன்பு தனது வீட்டிற்கு முன்பு இரவு 6, 7 மணிக்கு ரவிக்குமார் என்பவர் பெருமாளை வயிற்றில் குத்தினார் என்றும், பின்னர் குத்துப்பட்ட பெருமாள் மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டதாகவும், இந்த வழக்கு குறித்து தனக்கு வேறு எதுவும் தெரியாது என்றும், இது குறித்து போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். <u>அ.சா.3 கண்ணம்மாள்</u> சுமார் 2 வருடத்திற்கு முன்பு அ.சா.2 முத்தம்மாள் வீட்டிற்கு முன்பு 1வது எதிரி ரவிக்குமார் என்பவர் அ.சா.1 பெருமாளை வயிற்றில் குத்தியதாகவும், அ.சா.1 மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டதாகவும், இந்த வழக்கு குறித்து தனக்கு வேறு எதுவும் தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். <u>அ.சா.4 நவீன்</u> என்பவர் சுமார் 2 வருடத்திற்கு முன்பு தனது வீட்டிற்கு முன்பு இரவு 07.45 சாப்பிட்டு கொண்டிருந்த போது பக்கத்தில் சத்தம் கேட்டு, வெளியில் வந்த போது, 1வது எதிரி ரவிக்குமார், 2வது எதிரி மணிகண்டனுடன் தனது அப்பா அ.சா.1 பெருமாளை குத்திவிட்டு தப்பித்து ஓடிவிட்டதாகவும், தனது தந்தை மயங்கிவிட்டார் என்றும், சி.எப். மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். <u>அ.சா.5 நிர்மல்</u> என்பவர் கடந்த 04.06.2022ம் தேதி அ.சா.2 முத்துலெட்சுமி வீட்டிற்கு முன்பாக இரவு 07.45 மணிக்கு 1வது எதிரி ரவிக்குமார் என்பவர் அ.சா.1 பெருமாளை கத்தியால் இடது பக்க வயிற்று பகுதியில் குத்திவிட்டார் என்றும், பின்னர் ஒட்டன்சத்திரம்

சி.எப்.மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.6 செல்வக்குமார் என்பவர் 04.06.2022ம் தேதி இரவு 07 முதல் 08 மணிக்குள் நீதிமன்றத்தில் முதலில் நிற்கும் நபர் கத்தியால் குத்திவிட்டதாக தனக்கு தொலைபேசியில் தகவல் வந்ததாகவும், தான் நேரடியாக ஒட்டன்சத்திரம் சி.எப்.மருத்துவமனைக்கு வந்ததாகவும், அம்பிளிகை போலீசார் அங்கு வந்த போது தான் உடன் இருந்ததாகவும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.7 பால்ராஜ் என்பவர் சுமார் 2 வருடத்திற்கு முன்பு காலை 11.00 மணிக்கு அம்பிளிகை போலீசார் தனது வீட்டு பக்கம் வந்து, சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்து, தன்னிடம் கையெழுத்து கேட்டார்கள் என்றும், அ.சா.ஆ.2 பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து தன்னுடையது தான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.8 பழனிச்சாமி என்பவர் சுமார் 2 வருடத்திற்கு முன்பு தானும், சுப்பிரமணியும் பஸ் ஸ்டாண்டில் நின்று கொண்டிருந்தபோது, அம்பிளிகை போலீசார் ரவிக்குமார் மற்றும் மணியையும் குத்திய கத்தி எங்கே என்று கேட்டதாகவும், போலீசார் தங்களிடம் கையெழுத்து கேட்டார்கள் என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து அ.சா.ஆ.3 மற்றும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையெழுத்து அ.சா.ஆ.4 தன்னுடையது தான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.9 மருத்துவரான ராஜ்குமார் என்பவர் கடந்த 04.06.2022ம் தேதி இரவு 9 மணியளவில் பி.பெருமாள் என்பவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது சம்பந்தமாக சாட்சியம் அளிப்பதற்கு சி.எப். மருத்துவமனையில் அ.சா.ஆ.5 அனுமதி கடிதம் வழங்கியாகவும், அன்றைய தினம் பெருமாள் என்பவரை பரிசோதனை செய்த போது அவர் மதுவில் இருந்தார் என்றும், அவரை விசாரணை செய்த போது அவரது உறவினருடன் தகராறு ஏற்பட்டதாக தெரியவந்தாகவும், அவருக்கு 2x1.5x1.5 செ.மீ. அளவுள்ள இடது வயிற்று பகுதியில் ஆழமான வெட்டுக்காம் காணப்பட்டதாகவும், அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று அ.சா.ஆ.6 காயச்சான்று வழங்கியுள்ளார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.10 முத்துகிருஷ்ணன் என்பவர் கடந்த 05.06.2022ம் தேதி இரவு 09 முதல் 10 மணிக்கு மூலனூர் நாகப்பன்பட்டியில் அம்பிளிகை போலீசார் விசாரித்து கொண்டிருப்பதாக

கேள்விபட்டு சென்ற போது, சம்பவ இடத்தை பார்வையிட்டு அம்பிளிகை போலீசார் வரைபடம் வந்து கொண்டிருந்ததை பார்த்ததாகவும், அதில் சாட்சி கையொப்பம் செய்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.11 சுப்பிரமணி என்பவர் சம்பவ இடத்தில் பேருந்துக்காக நின்ற கொண்டிருந்ததாகவும், போலீசார் தன்னிடம் கத்தியை காட்டி இந்த கத்தியால் தான் குத்தினாரா என்று கேட்டதாகவும், தான் தெரியவில்லை என்று சொல்லியதாகவும், வெள்ளைதாளில் கையெழுத்து செய்ததாகவும், ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து அ.சா.ஆ.8 என்றும், போலீசார் தன்னை விசாரிக்க வில்லை என்றும் பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.12 சவடமுத்து என்பவர் கடந்த 04.06.2022–ம் தேதி 22.00 மணிக்கு அம்பிளிக்கை காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் காவல் உதவி ஆய்வாளராக பணிப்பொறுப்பில் இருந்தபோது ஒட்டன்சத்திரம் சி.எப். மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மருத்துவமனைக்கு சென்று, உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த அ.சா.1 பெருமாள் என்பவரிடம் வாக்குமூலம் பெற்று, கடந்த 05.06.2022ம் தேதி காவல் நிலைய குற்ற எண்.73/2022 இ.த.ச.பிரிவுகள் 294(பி), 342, 307 ன் கீழாக செய்த அ.சா.ஆ.9 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 05.06.2022ம் தேதி காலை 04.00 மணிக்கு சம்பவ இடமான நாகப்பன்பட்டி, ஆதிதிராவிடகாலனி, முத்துலெட்சுமி வீட்டு சந்தில் வைத்து சாட்சிகள் பால்ராஜ், முத்துகிருஷ்ணன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.7 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.10 மாதிரி வரைபடம் தயார் செய்தாகவும், பின்னர் சாட்சிகளான பெருமாள், முத்துலெட்சுமி, கண்ணம்மாள், நவீன், நிர்மல் ஆகிய சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளையும், சம்பவத்தை கேள்விபட்ட மகஜர் சாட்சிகளான பால்ராஜ், சாட்சியான செல்வக்குமார் பார்வை மற்றும் முத்துக்கிருஷ்ணன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், இவ்வழக்கின் எதிரிகளான ரவிக்குமார், மணிகண்டன் ஆகிய இருவரையும் 05.06.2022ம் தேதி காலை 05.00 மணிக்கு வெரியப்பூர் பஸ்டாப் அருகில் வைத்து கைது செய்து, எதிரி ரவிக்குமார் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் சுப்பிரமணி, பழனிச்சாமி ஆகியோர்கள் முன்னிலையில்

பதிவு செய்து, சாட்சிகளிடம் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் பெற்றதாகவும், எதிரிகள் சம்பவத்தில் பயன்படுத்திய கத்தியை 05.06.2022ம் தேதி காலை 06.45 மணிக்கு நாகப்பன்பட்டி, ஆதிதிராவிட காலனி, முத்தாலம்மன் கோவில் அருகே உள்ள முட்புதறில் வைத்திருந்த கத்தி சுமார் 22 செ.மீ நீளமுள்ள சிவப்பு, புளூ, வெள்ளை நிறம் கலந்த கைப்பிடி பாகம் 10 செ.மீ என்றும், கத்தியின் கூர்முனையுடன் இரும்பு பாகம் சுமார் 12 செ.மீ உள்ள கத்தியினை அ.சா.ஆ.11 கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி அந்த கைப்பற்றுதல் மகஜரில் சாட்சிகள் சுப்பிரமணி, பழனிச்சாமி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, அ.சா.ஆ.12 படிவம் 91 தயார் செய்ததாகவும், எதிரிகளை கைது செய்து 05.06.2022ம் தேதி 15.30 மணிக்கு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும், பின்பு இவ்வழக்கின் முதற்கட்ட விசாரணையை முடித்து தொடர்ச்சியான புலன் விசாரணைக்காக வேண்டி வழக்கு கோப்பினை ஒட்டன்சத்திரம் வட்டக்காவல் நிலைய ஆய்வாளர் பார்வைக்கு வைத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். <u>அ.சா.13 வெங்கடாசலபதி</u> என்பவர் இவ்வழக்கில் அ.சா.1 பெருமாள் என்பவர் கொடுத்த வாக்குமூலத்தின் தன்மைபடி அம்பிளிக்கை காவல் நிலைய குற்ற எண்.73/2022 என்ற குற்ற எண்ணில் இ.த.ச பிரிவுகள் 294(பி), 342, 307ன் கீழாக முதல் தகவல் அறிக்கையை காவல் உதவி ஆய்வாளர் அ.சா.12 சவடமுத்து என்பவர் பதிவு செய்துள்ளார் என்றும், 10.06.2021-ம் தேதி இவ்வழக்கை தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, சம்பவயிடம் சென்று பார்வையிட்டதில் ஏற்கனவே சார்பு ஆய்வளாரால் விசாரணை செய்தபோது சொன்னபடியே தன்னிடமும் சாட்சிகள் கூறியதால் தனியாக சாட்சிகளிடம் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும், வழக்கின் சட்டப்பிரிவுகளை அன்றைய தினமே இ.த.ச.பிரிவுகள் 294(பி), 342, 307 ஆகிய பிரிவுகளில் இருந்து இ.த.ச பிரிவுகள் 294(பி), 342, 307 உ/இ பிரிவு 34 இ.த.ச படி அ.சா.ஆ.13 சட்டப்பிரிவு மாறுதல் செய்து மாறுதல் அறிக்கை தயார் செய்ததாகவும், வழக்கு சொத்தை ஒட்டன்சத்திரம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து 23.06.2022-ம் தேதி புலன் விசாரணைக்காக ஒட்டன்சத்திரம் சி.எப்.மருத்துவமனைக்கு சென்று இவ்வழக்கில்

காயம்பட்ட பெருமாள் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவரிடம் காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், புகார்தாரரான அ.சா.1 என்பவரிடம் அன்றையதினமே மறு வாக்குமூலம் பதிவு செய்து, உதவி ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 294(பி), 342, 307உ /இ 34 ஆகிய பிரிவுகளின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

**5.** இவ்வழக்கில் இறுதி அறிக்கை சாட்சிய வரிசை பட்டியலில் மொத்தம் 13 சாட்சிகளின் பெயர்கள் குறிப்பிட்டிருந்ததில், அ.சா.1 முதல் அ.சா.13 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அரசு தரப்பில் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.13 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டும், சா.பொ.1 கத்தி குறியீடு செய்யப்பட்டும், அரசு தரப்பில் சாட்சிய விசாரணை முடிக்கப்பட்டுள்ளது.

**6.** அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள், சங்கதிகளிலிருந்து குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு பாதகமாக தோன்றும் பகுதிகளைத் தொகுத்து கு.வி.மு.ச. பிரிவு 313 (1) (ஆ)–ன்படி வினவியபோது, குற்றம் சாட்டப்பட்டவர்கள் அரசு தரப்பு சாட்சியத்தை பொய் சாட்சி என்று கூறினார்கள்.

**7.** குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுபொருட்கள் எதுவும் முன்னிலைப்படுத்தவில்லை.

**8.** அரசு தரப்பு வழக்குரைஞர் வாதிடும்போது, இவ்வழக்கை பொறுத்து மருத்துவ சாட்சியான அ.சா.9 என்பவரின் சாட்சியமானது மிக முக்கியமானது என்றும், அ.சா.1 என்பவருக்கு இடது வயிற்று பகுதியில் ஆழமான வெட்டுக்காயம் உள்ளதாகவும், அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று அ.சா.ஆ.6 காயச்சான்றிதழில் 1வது குற்றம் சாட்டப்பட்டவர் செய்த செயலானது சரியாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், அ.சா.12 மற்றும் அ.சா.13 காவல் ஆய்வாளர்களின் சாட்சியமானது ஏற்புடைய சாட்சியமாக உள்ளது என்றும், அரசு தரப்பு சாட்சிகள் ஏதோ ஒரு காரணத்திற்காக புலன்விசாரணை அதிகாரியின் முன்பு அளித்த வாக்குமூலத்திற்கு முரண்பட்டு, இந்நீதிமன்றத்தில் சாட்சியம்

முன்னிலைப்படுத்தியுள்ளார்கள் என்றும், இந்த குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என்று அரசு தரப்பில் வாதிடப்பட்டது.

**9.** 1 மற்றும் 2 குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பு கற்றறிந்த வழக்குரைஞர் வாதிடும்போது, சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகள் அனைவரும் சம்பவத்தை பற்றி சாட்சியம் முன்னிலைப்படுத்தவில்லை என்றும், அ.சா.1 என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில், சம்பவத்தை நேரில் பார்த்ததாக அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தியுள்ள சாட்சிகள் யாரும் சம்பவத்தை நேரில் பார்த்ததாக சாட்சியம் அளிக்கவில்லை என்றும், அ.சா.1 என்பவருக்கு ஏற்பட்ட காயமானது எவ்வாறு ஏற்பட்டது என்பதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு அ.சா.1 என்பவருக்கு உள்ளது என்றும், அ.சா.1 என்பவரின் சாட்சியத்தின் அடிப்படையில் இந்த குற்றம் சாட்டப்பட்டவர்களை தண்டிக்க இயலாது என்றும், 1 மற்றும் 2 குற்றம்சாட்டப்பட்டவர்களை இந்த குற்ற வழக்கில் இருந்து விடுதலை செய்ய வேண்டும் என்றும், குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் வாதிட்டார்.

**10.** அரசு தரப்பில் 1வது குற்றம் சாட்டப்பட்டவர் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 307 ஆகிய பிரிவுகளின் கீழாகவும், 2 வது குற்றம் சாட்டப்பட்டவர் மீது இ.த.ச. பிரிவுகள் 342, 307 உ/இ 34 பிரிவுகளின் கீழாகவும் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதே இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனையாகும்.

**11. பிரச்சனைக்குரிய தீர்வுகள் :**

**11.1.** இருதரப்பு சாட்சியங்கள், சான்றாவணங்கள், வாதுரைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது. அ.சா.1 பெருமாள் என்பவரின் மகன்களுக்கு 1வது எதிரி குடிக்க பழக்கிவிட்டது சம்பந்தமாக ஏற்பட்ட வாய்தகராறில் 1வது எதிரி, அ.சா.1யை அசிங்கமாக பேசியதால் சத்தம் போட்ட அ.சா.1 என்பவரை 1வது எதிரியின் உடன்பிறந்த தம்பியான 2வது எதிரி மணிகண்டன் அ.சா.1யை பின்னால் பிடித்துக்கொள்ள 1வது எதிரி ரவிக்குமார், இவனை இப்படியே விட்டால் நல்லா இருக்காது இத்தோடு செத்துப்போடா

என்று சொல்லிக்கொண்டே 2வது எதிரி இடுப்பில் மறைந்து வைத்திருந்த கத்தியை எடுத்து அ.சா.1ன் இடது பக்க அடிவயிற்றில் குத்தி கொடுங்காயத்தை ஏற்படுத்தி கொலை செய்யும் முயற்சி செய்து 1வது குற்றம் சாட்டப்பட்டவர் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 307 ஆகிய பிரிவுகளின் கீழாகவும், 2 வது குற்றம் சாட்டப்பட்டவர் மீது இ.த.ச. பிரிவுகள் 342, 307 உ/இ 34 பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டிற்குரிய குற்றசெயல்களை புரிந்திருப்பார்களா ? என்று பார்க்கும்போது, கடந்த 04.06.2022ம் தேதி இரவு 7.45 மணியளவில் அ.சா.1 என்பவர் அவரது வீட்டிற்கு செல்வதற்கு அ.சா.2 முத்துலெட்சுமி என்பவரின் வீட்டிற்கு பின்புறம் உள்ள சந்தில் நடந்து சென்று கொண்டிருந்தபோது அ.சா.1ன் மகன்களுக்கு 1வது எதிரி குடிக்க பழக்கி விட்டது சம்பந்தமாக அ.சா.1 என்பவருக்கும் 1 வது எதிரிக்கும் வாய்தகராறு ஏற்பட்டதில், அ.சா.1 என்பவரை 1வது எதிரி அசிங்கமாக பேசியும், 2வது எதிரி அ.சா.1யை நகரவிடாமல் பிடித்துக்கொண்டும், 1வது எதிரி அ.சா.1 என்பவரை இவனை இப்படியே விட்டால் நல்லா இருக்காது இத்தோடு செத்துப்போடா என்று சொல்லி 2வது எதிரி அவரது இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து அசா.1ன் இடது பக்க அடிவயிற்றில் குத்தி கொடுங்காயத்தை ஏற்படுத்தி கொலை செய்ய முயற்சி செய்தும், கொலை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் செயல்பட்டதில் அ.சா.1 என்பவருகது இடது பக்க வயிற்றில் இரத்தக்காயம் ஏற்பட்டதாகவும், மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்த பிறகு, அ.சா.1 என்பவரை மருத்துவ மனைக்கு வந்து, அ.சா.12 என்பவர் அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலம் பெற்று, அதன் அடிப்படையில் அ.சா.ஆ.9 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, விசாரணை மேற்கொண்டதாக அரசு தரப்பில் வழக்கை முன்னெடுத்து செல்லப்பட்டுள்ளது.

**11.2.** அ.சா.1 என்பவர் தான் அளித்த புகார் மனுவில், கடந்த 04.06.2022 ம் தேதி இரவு 07.45 மணியளவில் முத்துலட்சுமி வீட்டு சந்தில் தனக்கும், ரவிக்குமாருக்கும் தகராறு வந்ததாகவும், ரவிக்குமார் தன்னை அசிங்கமாக பேசியதை ஏன்டா என்னை அசிங்கமாக பேசுற என்று சத்தம் போட்டதாகவும், அங்கு வந்த ரவிக்குமாரின் தம்பி மணிகண்டன் தன்னை பின்னால் பிடித்துக்கொள்ள ரவிக்குமார் இத்தோடு செத்து போடா என்று சொல்லி மறைத்து வைத்திருந்த சிறு கத்தியை எடுத்து தனது இடது பக்க

அடி வயிற்றில் குத்தியதாகவும், தான் சத்தம் போட்டதால் அங்கிருந்த முத்துலெட்சுமி, அ.சா.1ன் தாயார் கண்ணம்மாள், பழனியம்மாள், அ.சா.1ன் மகன்கள் நவீன், நிர்மல் ஆகியோர்கள் அ.சா.1யை இரவு சுமார் 9.00 மணிக்கு ஒட்டன்சத்திரம் சி.எப்.மருத்துவனையில் சிகிச்சைக்கு சேர்த்ததாகவும், அங்கு சிகிச்சையில் இருந்தபோது, காவல் உதவி ஆய்வாளர் விசாரித்து, அ.சா.ஆ.1 புகார் மனு பெற்று, புகார் மனுவின் தன்மைப்படி கடந்த 04.06.2022ம் தேதி இரவு 10.00 மணிக்கு அ.சா.ஆ.9 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கையின் சங்கதிகளில் இருந்து அறிய முடிகிறது.

**11.3.** வழக்கு சம்பத்தை கண்ணுற்ற சாட்சிகளாக அரசு தரப்பில் அ.சா.2 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.1 என்பவர் கொடுத்த புகார் மனுவில், 2வது குற்றம் சாட்டப்பட்டவர் தன்னை பிடித்துக்கொண்டபோது, 1வது குற்றம் சாட்டப்பட்டவர் கத்தியால் இடது பக்க வயிற்றில் குத்தியதாக சொல்லியுள்ளதற்கு ஆதரவாக புலன் விசாரணை அதிகாரியிடம் வாக்குமூலம் கொடுத்துள்ளார். அ.சா.1 என்பவர் இந்நீதிமன்ற சாட்சியத்தில் சம்பவத்தன்று தான் மது போதையில் இருந்ததாகவும் ஒப்புக்கொண்டுவிட்டு, பிறகு மது போதையில் இல்லை என்றும் சாட்சியம் முன்னிலைப்படுத்தியுள்ளார். மேற்படி அ.சா.1 என்பவரின் சாட்சியத்துடன் மருத்துவரான அ.சா.9 என்பவரின் சாட்சியத்தை ஒருங்கியல்பாக பரிசீலனை செய்து பார்க்கும்போது, அ.சா.9 என்பவர் இந்நீதிமன்ற சாட்சியத்தில், "**அன்றைய தினம் அவரை பரிசோதனை செய்தபோது அவர் மதுவில் இருந்தார்.**" என்று சாட்சியம் முன்னிலைப்படுத்தியுள்ளார். எனவே சம்பவம் நடந்ததாக சொல்லப்படுகிற 04.06.2022ம் தேதி இரவு அ.சா.1 என்பவர் மதுபோதையில் இருந்துள்ளார் என்பதை அ.சா.1 என்பவரும் ஒப்புக்கொண்டுள்ளார். அதே சமயம் அ.சா.1 என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவரான அ.சா.9 என்பவர் அளித்த சாட்சியத்தில் அ.சா.1 மது போதையில் இருந்தார் என்று சாட்சியம் அளித்துள்ளதால் சம்பவதினத்தன்று அ.சா.1 மதுபோதையில் இருந்துள்ளார் என்பது மிகத்தெளிவாகிறது.

**11.4.** சம்பவத்தை கண்ணுற்றதாக அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர்கள் இந்நீதிமன்ற சாட்சியத்தில் சம்பவம் நடந்ததாக

சொல்லக்கூடிய இடம் வீதியில் தான் சம்பவம் நடந்தது என்றும், 10 நபர்கள் சேர்ந்து அ.சா.1 என்பவரை பிடித்துக்கொண்டபோது கத்தியால் குத்திவிட்டார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்கள். சம்பவத்தை கண்ணுற்றதாக அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அ.சா.1 என்பவரின் மகனான அ.சா.4 என்பவர் இந்நீதிமன்ற சாட்சியத்தில் தான் வீட்டில் சாப்பிட்டு கொண்டிருந்த போது சத்தம் கேட்டு வந்தபோது ரவிக்குமார், மணிகண்டன் ஆகியோர்கள் எனது அப்பாவை குத்தி விட்டு தப்பி ஓடிவிட்டார்கள் என்றும், சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், கேள்விபட்டதாக சாட்சியம் முன்னிலைப்படுத்தியுள்ளார். அ.சா.1 என்பவரின் மற்றொரு மகனான அ.சா.5 என்பவர் இந்நீதிமன்றத்தில் அளித்த சாட்சியத்தில், சம்பவம் நடந்தபோது நவீன் என்பவர் தன்னோடு இருந்ததாகவும், சம்பவம் நடந்த இடமானது 10 அடி அகலமுள்ள ரோடு என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.4 என்பவர் தான் சம்பவத்தை பார்க்கவில்லை என்று அளித்த சாட்சியத்திற்கு முற்றிலும் முரண்பட்டு அ.சா.5 சம்பவத்தை பார்த்ததாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.4 என்பவருடன் அ.சா.5 ஒன்றாக இருந்ததாக தனது சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ள நிலையில், அ.சா.4 சம்பவத்தை பார்க்காத போது அ.சா.5 சம்பவத்தை நேரில் பார்த்ததாக சாட்சியம் அளித்திருப்பது நம்பும்படியாக இல்லை.

**11.5.** அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தியுள்ள பார்வை மகஜர் சாட்சிகளான அ.சா.7 மற்றும் அ.சா.10 ஆகியோர்களின் சாட்சியத்தை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்து பார்க்கும்போது, போலீசார் தன்னுடைய வீட்டிற்கு வந்து பார்வை மகஜரில் கையொப்பம் வாங்கினார்கள் என்றும், அ.சா.10 என்பவர் அளித்த சாட்சியத்தில் தான் பஸ் நிறுத்தத்தில் இருந்தபோது கையொப்பம் செய்ததாகவும் சாட்சியம் முன்னிலைப்படுத்தியுள்ளார்கள். இவ்வழக்கு சம்பவமானது 04.06.2022ம் தேதி இரவு 07.45 மணிக்கு முத்துலெட்சுமி வீட்டு சந்தில் நடந்ததாக புகார்மனுவில் குறிப்பிட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, இறுதி அறிக்கையிலும் சம்பவயிடமானது முத்துலெட்சுமி வீட்டு சந்தில் சம்பவம் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தியுள்ள அ.சா.ஆ.7 பார்வை மகஜரில் சம்பவயிடமானது நாகப்பன்பட்டி A.D. காலனி முத்துலெட்சுமி வீட்டு சந்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் மாதிரி

வரைபடமான அ.சா.ஆ.10 ஆவணத்தில் சம்பவயிடமானது நாகப்பன்பட்டி A.D. காலனி மண் பாதையில் நடந்ததாக சம்பவயிடம் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வழக்கில் முதல்கட்ட புலன் விசாரணை மேற்கொண்ட அ.சா.12 என்பவர் சம்பவயிடத்தை பார்வையிட்ட மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார்.

**11.6.** சம்பவம் நடந்த இடத்தை பற்றி அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர்கள் இந்நீதிமன்றத்தில் முத்துலெட்சுமி வீட்டிற்கு முன்பு வாசலில் சம்பவம் நடந்ததாகவும், அ.சா.4 என்பவர் வீதியில் சம்பவம் நடந்ததாகவும், அ.சா.5 என்பவர் வாசல் பகுதியில் உள்ள சந்தில் சம்பவம் நடந்ததாகவும், பார்வை மகஜர் சாட்சியான அ.சா.7 என்பவர் சம்பவம் நடந்த இடமானது அ.சா.1 பெருமாள் வீட்டு வாசல் என்றும், பார்வை மகஜர் மற்றொரு சாட்சியான அ.சா.10 என்பவர் சம்பவம் நடந்த இடத்தை பற்றி தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் முன்னிலைப்படுத்தியுள்ளார்கள். இவ்வழக்கை பொறுத்து சம்பவம் நடந்த இடத்தை பற்றி சம்பவத்தை கண்ணுற்ற மற்றும் பார்வை மகஜர் சாட்சிகள் ஒவ்வொருவரும் சம்பவம் நடந்த இடத்தை பற்றி முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால் சொல்லியுள்ள இடத்தில் சம்பவம் நடைபெற்றிருக்குமா என்ற அடிப்படை சந்தேகம் வலுவாக எழுகிறது.

**11.7.** அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தியுள்ள அ.சா.6 என்பவர் அ.சா.1 என்பவர் கொடுத்த புகார்வாக்குமூலத்தில் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார். ஆனால் அ.சா.6 இந்நீதிமன்ற சாட்சியத்தில் மேற்படி புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையது அல்ல என்றும் சாட்சியம் முன்னிலைப்படுத்தியுள்ளார். எனவே, அ.சா.1 என்பவர் கொடுத்த வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு அ.சா.1 என்பவரை சார்ந்ததாகும். அ.சா.1 என்பவர் தான்அளித்த புகார் வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகளை சம்பவத்தை கண்ணுற்ற மற்ற சாட்சிகள் வழியாக நிரூபிக்கவில்லை. ஒப்புதல்வாக்குமூல சாட்சிகளான அ.சா.8 மற்றும் அ.சா.11 ஆகியோர்கள் வழியாக சான்று பொருளை கைப்பற்றிய விதத்தை அரசு தரப்பானது தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை. மேலும், அ.சா.12 என்பவரின் வழியாக சான்று பொருட்கள் இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டுள்ளதே தவிர மேற்படி

சான்று பொருட்களை கைப்பற்றியது தொடர்பாக அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தியுள்ள அ.சா.8 மற்றும் அ.சா.11 ஆகியோர்கள் ஒப்புதல் வாக்குமூலத்தில் கண்ட சங்கதிகளுக்கு வலுச்சேர்க்கும் விதமாக சாட்சியம் எதுவும் முன்னிலைப்படுத்தவில்லை.

**11.8.** இவ்வழக்கில் முன்னிலைப்படுத்தியுள்ள அனைத்து சாட்சிகளையும் ஒருங்கியல்பாக பரிசீலனை செய்து பார்க்கும்போது, காயம்பட்ட நபரான அ.சா.1 என்பவரை 1வது எதிரி கத்தியால் இடது பக்க வயிற்றில் குத்தி கொடுங்காயம் ஏற்படுத்தியதாக சாட்சியம் அளித்துள்ளபோதும், வழக்கின் சம்பவ சாட்சிகளான அ.சா.2 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் எதிரிகளை பற்றியும், சம்பவம் நடந்த இடம் மற்றும் சம்பவம் நடந்த விதம் பற்றியும் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்காத நிலையிலும், சம்பவத்தை கண்ணுற்றதாக அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தியுள்ள அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் ஒருவருக்கொருவர் முரண்பட்டு சாட்சியம் அளித்திருப்பதாலும், சம்பவயிடம் பற்றி ஒவ்வொரு சாட்சியும் ஒருவருக்கொருவர் முரண்பட்டு சாட்சியம் முன்னிலைப்படுத்தியிருப்பதாலும், சொல்லியுள்ள நேரத்தில் சொல்லியுள்ள முறையில், சொல்லியுள்ள விதத்தில், அ.சா.1 என்பவரை 1 மற்றும் 2 குற்றம் சாட்டப்பட்டவர்கள் அசிங்கமாக பேசி, 2வது எதிரி பிடித்துக்கொள்ள 1வது எதிரி கத்தியால் இடது பக்க வயிற்றில் குத்தி கொலை முயற்சி செய்யக்கூடிய குற்றத்தை குற்றம் சாட்டப்பட்டவர்கள் புரிந்திருப்பார்களா ? என்ற அடிப்படை சந்தேகம் வலுவாக எழுகிறது.

**11.9.** அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தியுள்ள சாட்சிகள் அனைவரும் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் முன்னிலைப்படுத்தியுள்ளதால், இந்த குற்றம் சாட்டப்பட்டவர்கள் இந்த குற்றச்செயலை புரிந்திருப்பார்களா? என்ற அடிப்படை சந்தேகம் வலுவாக எழுகிறது. எனவே, அரசு தரப்பானது இந்த குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**12. முடிவில்,**

**1. 1 மற்றும் 2 குற்றம் சாட்டப்பட்டவர்கள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகியுள்ளார்கள்.**

**2. இவ்வழக்கில் 1 மற்றும் 2 குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது அரசு தரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமின்றி நிரூபிக்காத காரணத்தினால், 1வது குற்றம் சாட்டப்பட்டவர் இ.த.ச. பிரிவுகள் 294(b), 307 ஆகிய பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டிற்கும், 2 வது குற்றம் சாட்டப்பட்டவர் இ.த.ச. பிரிவுகள் 342, 307 உ/இ 34 பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டிற்குமான குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்தும், 1 மற்றும் 2 குற்றம் சாட்டப்பட்டவர்களை கு.வி.மு.ச. பிரிவு 235(1) நிகரான பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச் சட்டம், 2023 பிரிவு 258(1)ன் கீழாக விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**3. குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பிணைபத்திரமானது மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு தானாகவே ரத்தாக உத்தரவிடப்படுகிறது.**

**4. இவ்வழக்கில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள சான்று பொருள் ஒட்டன்சத்திரம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஆர்.பி.ஆர்.81/2022 என்ற எண்ணில் கடந்த 07.06.2022ஆம் தேதி பெறப்பட்டுள்ளது. இந்நீதிமன்றத்தில் ஆர்.பி.ஆர்.எண்.01/2025 என்ற எண்ணில் 14.02.2025ம் தேதி பெறப்பட்டுள்ள சா.பொ.1 கத்தியை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அரசு தரப்பிற்கு அறிவிப்பு கொடுத்து, பதில் பெறப்பட்ட பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது.**

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 23ஆம் நாள் அவையறிய திறந்த நீதிமன்றத்தில் தீர்ப்புரை பகரப்பட்டது.

C JAYAPPRAKASH
Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.07.23 13:30:57 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**
**(சார்பு நீதிபதி)**
**ஒட்டன்சத்திரம்**

**<u>சாட்சிகளின் பட்டியல் :</u>**

**அரசு தரப்பு சாட்சிகள் :**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | பெருமாள் | புகார்தாரர் |
| அ.சா.2 | முத்துலெட்சுமி | சம்பவ சாட்சி |
| அ.சா.3 | கண்ணம்மான் | சம்பவ சாட்சி |
| அ.சா.4 | நவீன் | சம்பவ சாட்சி |
| அ.சா.5 | நிர்மல் | சம்பவ சாட்சி |
| அ.சா.6 | செல்வக்குமார் | கேள்விபட்ட சாட்சி |
| அ.சா.7 | பால்ராஜ் | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.8 | பழனிச்சாமி | ஒப்புதல்வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் கையெழுத்து செய்த சாட்சி |
| அ.சா.9 | ராஜ்குமார் | மருத்துவர் |
| அ.சா.10 | முத்துகிருஷ்ணன் | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.11 | சுப்பிரமணி | ஒப்புதல்வாக்குமூலம் சாட்சி |
| அ.சா.12 | ச.சவடமுத்து | காவல் உதவி ஆய்வாளர் |
| அ.சா.13 | வெங்கடாசலபதி | காவல் ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் :**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகார்வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2 | பார்வை மகஜரில் உள்ள அ.சா.7ன் முதல் கையெழுத்து |
| அ.சா.ஆ.3 | ஒப்புதல்வாக்குமூலத்தில் உள்ள அ.சா.8ன் இரண்டாவது கையெழுத்து |
| அ.சா.ஆ.4 | அத்தாட்சியில் உள்ள அ.சா.8ன் இரண்டாவது கையெழுத்து |
| அ.சா.ஆ.5 | அ.சா.9 மருத்துவர் அ.சா.1 என்பவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது சம்பந்தமாக சி.எப். மருத்துவமனையில் வழங்கப்பட்ட அனுமதிக்கடிதம் |
| அ.சா.ஆ.6 | காயச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.7 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.8 | ஒப்புதல்வாக்குமூலத்தில் உள்ள அ.சா.11ன் முதல் கையெழுத்து |

| | |
|---|---|
| அ.சா.ஆ.9 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.10 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.11 | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ.12 | படிவம் 91 |
| அ.சா.ஆ.13 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

**அரசு தரப்பு சான்று பொருள் :**

| | |
|---|---|
| சா.பொ.1 | சுமார் 22 C.M. நீளமும், அதில் சிவப்பு, புளூ, வெள்ளை கலர் கலந்த கைப்பிடி பாகம் 10C.M. ஆகவும், கத்தியின் கூர்முனையுடன் இரும்பு பாகம் சுமார் 12 C.M. ஆகவும் உள்ள கத்தி |

**குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் சாட்சிகள் : இல்லை**
**குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் சான்றாவணங்கள் : இல்லை**

குறிப்பு :

1. குற்றம் சாட்டப்பட்டவர் வழக்கு விசாரணையின்போது, பிணையில் இருந்து முன்னிலையாகியுள்ளார்.
2. அரசு தரப்பு சாட்சிகளை 3 வாய்தாவிற்கு மேல் விசாரிக்காமல் நிறுத்தி வைக்கவில்லை.
3. தீர்ப்பின் நகல் மாண்புமிகு திண்டுக்கல் முதன்மை மாவட்ட மற்றும் முதன்மை அமர்வு நீதிமன்றத்திற்கு பணிந்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
4. தீர்ப்பின் நகல் ஒட்டன்சத்திரம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு கோப்பிற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
5. தீர்ப்பின் நகல் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
6. புலனாய்வு முகமைக்கு அரசு கூடுதல் குற்றத்துறை வழக்குரைஞர் வழியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

C JAYAPPRAKASH
Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.07.23 13:31:06 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**
**( சார்பு நீதிபதி)**
**ஒட்டன்சத்திரம்**